**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைககள் திணைக்களத்தால் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும்.

- பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் திணைக்களத்தால் தயாரிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

21 நொவெம்பர் 2018 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாடுகள் இணங்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச சுற்றறிக்கை இல 267/2018 இன் உப பிரிவு 7(VI) இன் பிரகாரம் முற்பண சீரமைப்பு கணக்கு தயாரிக்கப்படவில்லை. | அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இற்கு அமைய முற்பண சீரமைப்பு கணக்கு கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது பொருத்தமான கணக்கு இணக்க கூற்றினை சமர்ப்பிப்பதற்கு குறிந்துரைக்கப்பட்டது. |
| (ஆ) | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பந்தி 7.2 இன் பிரகாரம்,வருமான அதிகாரிகள் சார்பாக வேறு திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமானது அவர்களது நிதி செயல்திறன் கூற்றில் திறைசேரியிடம் இருந்த முற்பணமாக அந்த வருமானத்தை உள்ளடக்க வேண்டிய ரூபா 6,811,803 வரியற்ற வருமானமாக பதியப்பட்டது. | அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | இந்த திணைக்களம் வேறு வருமான கணக்கு உத்தியோகத்தர் சார்பாக வருமானத்தை சேகரிக்கவில்லை. |

**1.6.2 கணக்கீட்டு பற்றாக்குறை**

**(அ) நிதி நிலைமை கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்திற்கு சொந்தமான கடுபெத்த கட்டிடம் மற்றும் 9 வேறு இடங்களில் அமைந்துள்ள 15 கட்டிடங்கள் சரியாக மதிப்பிடப்படவில்லை மற்றும் கணக்கில் காட்டப்படவில்லை.நிதியல்லா சொத்து கூற்றில் ரூபா 3000 மாத்திரம் கட்டிடம் மற்றும் நிர்மாணமாக பதியப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் நிதி நிலைமை கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | கட்டிடம் மற்றும் நிர்மானத்தை மதிப்பிடுவதற்காக தகவல்கள் மதிப்பீட்டு திணைக்களத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் பல சந்தர்ப்பங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும்,மதிப்பீட்டு அறிக்கைகள் இதுவரை வழங்கப்படவில்லை.கட்டிடத்தின் கீழ் ரூபா 3000 பதிவு ஒன்று காணப்பட்டது மற்றும் அதை கணணி முறைமையில் இருந்து நீக்கும் படி அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டது.அதை உடனடியாக சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் கட்டிடத்திற்காக ரூபா 2,712,855 மற்றும் வாகன முன்னேற்றத்திற்காக ரூபா 648,115 செலவு செய்யப்பட்ட போதிலும்,இது நிதியல்லா சொத்து கூற்றில் பதியப்படவில்லை. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் நிதி நிலைமை கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவற்றை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட ரூபா 1,350,000 பெறுமதியான 2 வாகனங்களின் தரவுகள் நிதியல்லா சொத்து கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் நிதி நிலைமை கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும | கணக்கினை சரி செய்வதற்கு அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்புடைய விசேட குறிப்புகளை உள்ளடக்கி அளவீடுகள் எடுக்கப்படும். |
| (iv) | ரூபா 17,350,000 பெறுமதியுடைய பயணிகளிற்கான வாகனங்கள் ( விற்பனை வாகன மதிப்பு குறைக்கப்பட்டவுடன்) நிதியல்லா சொத்து கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் நிதி நிலைமை கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| (v) | ரூபா 35,792,825 பெறுமதியான ஆதன பொறி உபகரண ஒதுக்கங்கள் பொறுப்புகளின் கீழ் உள்ளடக்கப்படவில்லை. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் நிதி நிலைமை கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |

**(ஆ) நிதி செயல்திறன் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முற்பண கணக்கு மீதியானது நிதி செயல்திறன் கூற்றின் படி ரூபா 97,895,850 மற்றும் திறைசேரி பதிவுகளின் மீதியின் படி ரூபா 244,188,750 ஆக காணப்பட்ட காரணத்தால் ரூபா 146,292,900 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018இன் பிரகாரம் நிதி செயல்திறன் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |
| (ii) | பெறப்பட்ட வைப்புக்கள் மீதியானது நிதி செயல்திறன் கூற்றின் படி ரூபா 6,690,909 மற்றும் திறைசேரி பதிவுகளின் மீதியின் படி ரூபா 9,697,739 ஆக காணப்பட்ட காரணத்தால் ரூபா 3,006,830 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018இன் பிரகாரம் நிதி செயல்திறன் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |
| (iii) | முற்பணமாக பெற்ற பண மீதியானது நிதி செயல்திறன் கூற்றின் படி ரூபா 2,018,015 மற்றும் திறைசேரி பதிவுகளின் மீதியின் படி ரூபா 5,932,313ஆக காணப்பட்ட காரணத்தால் ரூபா 3,914,298 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018இன் பிரகாரம் நிதி செயல்திறன் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |
| (iv) | போக்குவரத்து செலவு,வழங்கல்கள் மற்றும் பராமரித்தல் | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |

| | | |
|---|---|---|
| செலவுகளின் கூட்டுதொகையான ரூபா 5,981,341 மீண்டெழும் செலவினுள் உள்ளடக்கப்படவில்லை. | இல 267/2018இன் பிரகாரம் நிதி செயல்திறன் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | |

**(இ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 4,132,504 ஆக காட்டப்பட்ட தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக உருவாக்கப்பட்ட காசுபாய்ச்சலினை விட குறைவாக காணப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018இன் பிரகாரம் நிதி காசுப்பாய்ச்சல் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |
| (ii) | ரூபா 360,000 ஆக காட்டப்பட்ட தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் ஊடாக உருவாக்கப்பட்ட காசுபாய்ச்சலினை விட குறைவாக காணப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018இன் பிரகாரம் நிதி காசுப்பாய்ச்சல் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |
| (iii) | ரூபா 3,772,504 ஆக காட்டப்பட்ட தொகை நிதியீட்ட நடவடிக்கைகளின் ஊடாக உருவாக்கப்பட்ட காசுபாய்ச்சலினை விட அதிகமாக காணப்பட்டது. | 2018 நொவம்பர் 21 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல 267/2018இன் பிரகாரம் நிதி காசுப்பாய்ச்சல் கூற்று கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------- | --------------- | -------------------------------------------------- |
| (அ) | கணக்கீட்டு உத்தியோகத்தர் கட்டாயமாக திணைக்களத்தின் நிதி கட்டுபாட்டிற்காக வினைத்திறனான உள்ளககட்டுப்பாட்டு முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பதாக உறுதிப்படுத்துவதோடு மற்றும் முறைமையின் வினைத்திறன் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதாகவும் மற்றும் முறைமையின் வினைதிறனை உறுதி செய்ய தேவையான மாற்றங்கள் செய்யப்படுவதாகவும் மற்றும் அவ்வாறான மீளாய்வுகள் எழுத்து மூலமாக செய்யப்பட வேண்டியதோடு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மீளாய்வு மேற் கொண்டதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைமையை கணக்காய்வு செய்வதற்கு அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வருடாந்த மற்றும் பிற நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுவதையும் மற்றும் அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவற்றை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை முறையாக செய்ய ஒரு வினைத்திறனான முறை இருப்பதை கணக்கீட்டு அதிகாரி உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின் படி,அது பூர்த்தியாக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவற்றை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2) செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயற்பாடுகளின் செயற்திறனின்மை

#### (அ) கடுபெத்த பயிற்சி நிலையம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 28 டிசம்பர் 2016 இல் கடுபெத்த பயிற்சி நிலைய மண்டபத்தில் ரூபா 1,528,350 பெறுமதியான 6 குளிர் பதனாக்கிகள் பொருத்தப்பட்ட போதிலும், அவை 30 செப்ரெம்பா 2019 வரை பயன்படுத்தப்படவில்லை. | இயந்திரங்கள் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும். | குளிர் பதனாக்கிகளை இயக்குவதற்கு தற்போதுள்ள மின்சாரம் வழங்குவதற்கான அளவு போதுமானதாக இல்லாததால்,அதிகளவான திறன் வழங்குவாற்கு அளவீடுகள் எடுக்கப்படுகின்றது. |
| (ii) | நெசவு பயிற்சி பாடசாலையில் 08 கைத்தறிகளும் மற்றும் கடுபெத்த பயிற்சி நிலையத்தின் வடிவமைப்பு பயிற்சி பிரிவில் 15 கைத்தறிகளும் காணப்பட்ட போதிலும்,முறையே 2 பயிற்சியாளர்கள் மற்றும் 4 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர்.வேறு மாகணங்களில் உள்ள கைத்தறி நெசவு பாடசாலைகளில் ஆசிரியர்களிற்கு பயிற்சி அளிப்பதற்கு வடிவமைப்பு பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது மற்றும் 8 கைத்தறி இருந்த போதிலும்,இந்த 3 பாடசலைகளிற்கு 10 பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.அதன்படி,இருக்கின்ற மனித மற்றும் பௌதிக வளங்கள் குறைவான பயன்பாட்டில் இருப்பதை அவதானிக்கலாம். | வெளியீட்டு மட்டத்தின் செயல்திறன் குறிகாட்டிகள் தீர்மானிக்கப்பட்ட வெளியீட்டு அளவை அடையும் குறிகாட்டிகளின் படி இருக்க வேண்டும். | பொதுவாக ஒரு வருட பாட நெறிக்கு 20 மாணவர்கள் அளவில் சேர்க்கப்படுகின்றனர் மற்றும் 2019 ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டாலும்,வருகின்ற ஆண்டுகளில் எண்கள் வழமையானது போல இருந்தால்,குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான இயந்திரங்கள் தேவைப்படும் என்பதை தயவு செய்து தெரியப்படுத்துகின்றேன். |

## 2.2 வருடாந்த செயல்திறன் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16(2)இன் பிரகாரம்,அனைத்து நிறுவனங்களும் தங்கள் வருடாந்த நிதி அறிக்கையுடன் வருடாந்த செயல்திறன் அறிக்கையையும் கணக்காய்வு செய்ய சமர்ப்பிக்க வேண்டிய போதிலும்,அதன் படி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | சட்டத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுடன் வருடாந்த செயல்திறன் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.2018 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது மற்றும் தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கப்படுகின்றது. |

## 2.3 பெறுகைகள்

**(அ)** மீளாய்வாண்டில் கடுபெத்த பயிற்சி நிலையத்தை சீரமைப்பு செய்வதற்காக ரூபா 1,304,608 தொகையானது மதிப்பிடப்பட்டது மற்றும் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அரச பெறுகைகள் வழிகாட்டலின் உபபிரிவு 7.10.1(அ) இன் பிரகாரம்,தேசிய ஏல போட்டி செயன்முறையில் பாதுகாப்பு அளவீடாக ஏலக்காரரின் பிந்திய தகைமைகளை அமுல்படுத்த வேண்டிய போதிலும்,இது ஏலத்தை மதிப்பீடு செய்யும் போது கருத்தில் கொள்ளப்படவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டலின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல்.எவ்வாறாயினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுகுழு குறைந்த ஏலத்தை நிறுவனத்திற்கு வழங்க முன்பு நிறுவனத்தின் பிந்திய தகைமைகளை குறைந்த ஏலத்துடன் மதிப்பீடு செய்கின்றன. |
| (ii) | 03 ஒக்டோபர் 2007 திகதியிடப்பட்ட அரச பெறுகைகள் வழிகாட்டலின் 14 ஆவது உள்ளடங்கலான 8.13.4 இன் வழிகாட்டலின் பிரகாரம், ரூபா 975,720 இன் 10 சத வீத தேறிய வேறுபாட்டு பெறுமதி ரூபா 97,572 தொகையை பயிற்சி நிலையத்தின் சீரமைப்பு செய்வதற்கு ஒப்பந்த அனுமதியை | அரச பெறுகைகள் வழிகாட்டலின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | ரூபா 129,650 தொகையானது மேலதிக வேலை செய்வதற்காகும்.திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 130,450.அனைத்து மேலதிக கொடுப்பனவுகளும் 10 சதவீதத்திற்குள் செலுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவதற்கு பதிலாக 10 சதவீத மதிப்பீட்டு பெறுமதி ரூபா 130,450 திணைக்கள தலைவரால் அனுமதிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | பயிற்சி நிலையத்தை சீரமைப்பு செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட அளவீடுகள் 11 உருப்படிகள் பூர்த்தியாக்கப்படவில்லை மற்றும் இவற்றின் பெறுமதி ரூபா 160,560. | குறிப்புகளின் படி,பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளிற்கு மாத்திரம் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல்.எவ்வாறாயினும் 2 உருப்படிகளை தவிர மற்றையவை ஓரளவிற்கு முடிவடைந்தது. |

**(ஆ)** கடுபெத்த பயிற்சி நிலையத்தின் உள் வீதியில் கற்கள் மற்றும் நிலக்கீல் போடுவதற்கு ரூபா 744,782 செலவிடப்பட்டது மற்றும் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுகைகள் குறியீட்டின் 7.8 இன் அடிப்படையில்,ஏலதாரர்கள் சமர்ப்பித்த ஏலங்கள் சரி செய்தல் நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் ஆனால் அவை இணங்கவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டலின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல்.விலை சரி செய்தல் முறை எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். |
| (ii) | அரச பெறுகைகள் வழிகாட்டலின் 8.12.2(அ)(ஆ) இன் பிரகாரம்,வேலை முடிந்ததை சான்றளிக்கும் கடிதத்தை தொழில்நுட்ப அதிகாரி வழங்கவில்லை மற்றும் ஒப்பந்தகாரரிடமிருந்து பணம் செலுத்துவதற்கான கோரிக்கை கடிதத்தில் ஒரு சுருக்கமான குறிப்பு மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டலின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்படுதல்.எதிர்காலத்தில் தொழில்நுட்ப அதிகாரியிடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3 நல்லாளுகை

### 3.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) உபபிரிவின் பிரகாரம்,திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொருத்தமான உள்ளக கணக்காய்வாளரை நியமிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் உள்ளக கணக்காய்வு அலகு மற்றும் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. | கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் கட்டாயம் செயற்பட வேண்டும். | பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. |

## 4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் 157 மற்றும் உண்மையான ஊழியர்கள் 123 ஆக காணப்பட்ட காரணத்தால் 34 வெற்றிடங்கள் காணப்பட்டன.இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை மற்றும் 2008 ஆம் ஆண்டில் இருந்து நிர்வாக அலுவலகர் பதவி வெற்றிடமாக காணப்படுகிறது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது நிர்வாக அமைச்சிற்கு தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நியமனங்களை மேற்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது. |
| (ஆ) | 30 மே 2019 இல் திணைக்களத்தில் 6 அலுவலர்கள் 6 தொடக்கம் 10 வருட காலப்பகுதியில் இடமாற்றம் இல்லாமல் இணைந்த சேவையில் இணைக்கப்பட்டனர். | 30 யூன் 2017 திகதியிடப்பட்ட இணைந்த சேவை சுற்றறிக்கை இல 03/2017 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | 6 ஊழியர்களில் ஒருவர் ஏற்கனவே இடமாற்றப்பட்டார். |